# 6

# கைது செய்யப்படுதல்

## மத்தேயு 26:47-56; மாற்கு 14:43-52; லூக்கா 22:47-53; யோவான் 18:2-12

*"அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்" (மத்தேயு 26:47).*

இயேசு எங்கிருப்பார் என்பதை யூதாஸ் அறிந்திருந்தான். யூதத்துவ நடத்துனர்களை அவர் இருக்குமிடத்திற்கு வழிநடத்திச் செல்லுவதாக அவன் கூறியிருந்தான். இயேசு ஜெபித்துக்கொண்டிருப்பார் என்று அவன் அறிந்திருந்தான் - ஆனால் அவன் இயேசுவைப் பற்றி அறிந்திருக்கவில்லை!

நாம் இயேசுவை அறிந்திருக்கிறோம், ஆனால் அவரைப்பற்றி நாம் உண்மையிலேயே அறிந்திருக்கிறோமா? யூதாஸ் இயேசுவைப்பற்றி அறிய இயலாமல் போனது எவ்வாறு? நாம் அவரைப்பற்றி அறிய இயலாமல் போவது எவ்வாறு? நம் எல்லாருக்குள்ளும் ஒரு "யூதாஸ்" ஒளிந்திருக்கிறானா? நாம் மத்தேயு 26, மாற்கு 14, லூக்கா 22, மற்றும் யோவான் 18 ஆகிய அதிகாரங்களைக் கவனமாக வாசிக்க வேண்டும்.

யூதாஸினால் வழிநடத்தப்பட்ட கும்பல் (தோட்டத்திற்கு) வந்து சேர்ந்தது. கும்பலில் இருக்கும் மனிதர்கள் தங்கள் தனித்தன்மையை இழந்து போகின்றனர். வெறுப்புணர்வு சிந்தனையைப் புறக்கணிக்கிறது. ஆயுதம் ஏந்திய கும்பல் அச்சமுற்றது - இயேசுவைப்பற்றி மரணஅச்சமுற்றது. அவர்கள் இயேசு லாசருவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்திருந்தார் என்ற விஷயத்தை மறுக்கவோ அல்லது அதைப்பற்றிச் சந்தேகப்படவோ இல்லை. உண்மையில், அவர்கள் லாசருவையும் கொலை செய்வது பற்றி ஆலோசித்திருந்தனர் (யோவான் 12:10). யூதாஸ் அவர்களுக்குத் தீர்வாக இருந்தான்; அவன் அவர்களுக்கு இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் சூழப்பட்டிராத வேளையில் அவரைக் கண்டறியும் வாய்ப்பு ஒன்றைக் கொடுத்தான் (மத்தேயு 26:14-16; மாற்கு 14:10, 11; லூக்கா 22:3-5).

இது எவ்வளவு திகைப்புக்குரியதாக உள்ளது! ஆயுதமில்லாத ஒரு தீர்க்கதரிசியைக் கைது செய்வதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் கனத்த வகையில் ஆயுதமேந்தியவர்களாக வந்தனர். இயேசு திறந்தவெளியில் நின்று, "நான்இங்கிருக்கிறேன்" என்றார், அப்போது அந்தக் கும்பல் பின்னிட்டுத் தரையில் வீழ்ந்தது! (யோவான் 18:3-6ஐக் காணவும்.)

*இந்தக்குழுவை யூதாஸ்தான் இயேசுவினிடத்திற்கு வழிநடத்தி யிருந்தான், இருப்பினும் அவன் இன்னமும் இயேசுவை "இரபீ" என்று அழைத்தான் (மத்தேயு 26:49). இயேசு இன்னமும் அவனை "சிநேகிதனே" என்று அழைத்தார் (மத்தேயு 26:50). இது வஞ்சப்புகழ்ச்சியாக இருந்ததா? அனேகமாக இல்லை. இது யூதாஸ் கசப்புணர்வு கொள்வதில் உதவிற்றா? அனேகமாக உதவியிருக்கலாம்.*

*அச்சமுற்ற பேதுரு, வலிமையைப் புகலிடம் அடைந்தார். அவர் தமது பட்டயத்தை உருவி, மல்கூஸ் என்பவனின் வலது காது அறுந்து போகும்படி வெட்டினார்! பேதுரு பட்டயத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று அறிந்திருந்தார். அவர் அதைத் தாம் யார்மீது பயன்படுத்தக்கூடும் என்பதை அறிந்திருந்தார் (மல்கூஸ் ஒரு அதிகாரியல்ல, ஆனால் அடிமை யாயிருந்தான்). அவர் (பேதுரு), "நீங்கள் எங்களைக் கொல்லக் கூடும், ஆனால் உங்களிலும் சிலர் இறந்துபோவீர்கள்" என்று (கூறாமல்) கூறினார். இயேசு பேதுருவினிடத்தில், பட்டயத்தை உறையில் போடும்படி கூறிவிட்டு அமைதியாக, மல்கூஸின் காதைக் குணமாக்கினார் (மத்தேயு 26:51, 52; மாற்கு 14:47; லூக்கா 22:50, 51; யோவான் 18:10, 11).*

*நாம் யூதாஸின் பாவத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதற்கு அவனது இக்கட்டான நிலை பற்றி ஆய்வு செய்ய வேண்டும் (மத்தேயு 27:3-10). அவன் இயேசுவைக் காட்டிக்கொடுக்கப் பெற்றுக்கொண்ட பணத்தை (முப்பது வெள்ளிக்காசுகளை) திருப்பிக் கொடுத்துவிட்டான்; அது இப்பொழுது அவனுக்கு மதிப்பற்றதாக இருந்தது. காட்டிக் கொடுத்தவன் மேட்டிமையிலிருந்து வந்த கசப்புணர்வைக் கொண்டிருந்தான், ஆனால் அவன் தாழ்மையிலிருந்து வரும் மனந்திரும்புதலைக் கொண்டிருக்கவில்லை. அவன் தற்கொலை செய்து கொண்டான்.*

*யூதாஸ் தனது தவறைக் காண முடிந்தது, ஆனால் அவனால் தனது இரட்சகரைக் காண முடியவில்லை. அவன் வெளியே சென்று தன்னைத் தூக்கிலிட்டுக் கொண்டான். அவனை எவரொருவரும் கீழே இறக்கக்கூடவில்லை (நடபடிகள் 1:15-19). பாவம் என்பது பயங்கரமான விளைவுகளைக் கொண்டுள்ளது. காட்டிக் கொடுத்தவன் "தனக்குரிய இடத்துக்குப் போனான்" (நடபடிகள் 1:24) மற்றும் அவனைப் பற்றி வேத வாக்கியங்களில் மீண்டும் ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை. அவன் பிறவாதிருந்திருக்க வேண்டும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 26:24; மாற்கு 14:21)!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*